

மற்றும் ஓர்

# பிறந்த நாள்

அல்ல



கிறிஸ்துமஸ் என்பது இயேசுவின் வருடாந்திர பிறந்தநாள் கூடுகை அல்ல. கிறிஸ்துமஸ் வரலாற்று சிறப்பு மிக்க ஓர் நிகழ்வை நினைவு கூறுவது ஆகும் - தேவன் தமது மக்களை மீட்க இவ்வுலகில் மனிதனாக பிறக்க தெரிந்துகொண்ட நாள் இது.

அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளிலே சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றான்.

லூக் 2:9-12



உலகில் சமாதானம் கொண்டு வர இரட்சகர் அனுப்பப்படுவார் என்ற தேவனின் வாக்குத்தத்தம் இயேசுவின் பிறப்பில் நிறைவேறியது....

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்,
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்;
அவர் நாமம் அதிசயமானவர்; ஆலோசனைக்கர்த்தா,
வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா,
சமாதானப்பிரபு எனப்படும்.

ஏசாயா 9:6



## இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசிப்பவர்கள் தேவனிடத்தில் சமாதானம் பெறுகிறார்கள் என்பதே தேவனுடைய வாக்குத்தத்தம்.

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.

ரோமர் 5:1-2

தேவனுடைய சிறப்பு பரிசாகிய அவருடைய குமாரனுக்காக அவருக்கு நன்றி செலுத்துவதன் மூலம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் இணைந்து கொள்வோம்:

அன்பின் தேவனே
வியக்கத்தகு ஈவாகிய உம்முடைய குமாரன் இயேசு எங்களது ஆண்டவரும் இரட்சகருமாக இருப்பதற்காக நன்றி. இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து அவர் அருளும் சமாதானத்தை இந்த கிறிஸ்துமஸில் நான் அவரின் பிறப்பை கொண்டாடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள எனக்கு உதவி புரிந்தருளும். ஆமென்.

**இந்தக் கிறிஸ்துமஸில் உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக!**

இயேசுகிறிஸ்துவைக் குறித்து கூடுதலாக அறிய உங்களுக்கு அருகாமையில் உள்ள ஆலயத்தை அணுகுங்கள்.

Church Stamp / Address

新加坡
圣经公会
THE BIBLE SOCIETY®
OF SINGAPORE

7 Armenian Street, Bible House, Singapore 179932
Tel: (65) 6337 3222
Email: selection@bible.org.sg Website: www.bible.org.sg

For free additional copies, please contact Publishing Department 6304 3785 or 6304 3781

BSS 2015 10M ISBN 978 981 220 542 1 Tamil OV © BSI